JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
R.Santhanam, JARJ-Vol-3-1-May-2022:141-149 ISSN(O): 2582-5941

தமிழக வரலாற்று ஆவணங்களில் இசுலாமியரும் கொடையும்

Muslims and their gifts in historical documents of Tamil Nadu

Dr.R.Santhanam
Assistant Professor, Department of History, Sri Vasavi College, Erode.

Abstract

Generally the inscriptions are played a vital role in the history of a region. Similarly, the inscriptions found in Tamil Nadu are also mentions about the contributions of Islamic people in the various activities. Such a way, after the settlement of Islamic people in Tamil Nadu, their rulers, officers, merchants and common peoples are made donations to the place of worship, its related 'Matam' and welfare of common people. Like that donations are studied in this paper.

Keywords: Inscriptions, Islamic Peoples, made donations, place of worship, welfare.

1.முன்னுரை

பொதுவாக மக்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெறும் போது அவர்களுடைய கலாச்சாரம், பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் அப்பகுதியின் தாக்கம் ஏற்படுவது இயல்பு. தமிழக வரலாற்றைப் பொருத்தவரையில் சங்க காலத்திலிருந்து தமிழக மக்கள் கடல் கடந்து பிற பகுதிகளோடு வணிகம் செய்ததற்கான சான்றுகளும், அவ்வாறு வணிக நோக்கில் மற்ற பகுதிகளிலிருந்து தமிழகம் வந்தவர்கள் இங்கு தங்கியிருந்ததற்கான சான்றுகளும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலமாக வெளிக்கொணரப்பட்டுள்ளன. அந்த வகையில் தமிழகம் மற்றும் கேரளாவில் கிடைக்கப்பெறும் கி.பி.8ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளில் அஞ்சு வண்ணம் என்கிற வணிகக்குழு பறறிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இந்த அஞ்சு வண்ணம் வணிகக் குழுவினர் அரபு நாடுகளைச் சேர்ந்த இசுலாமியர்கள் என பல்வேறு ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு இடைக்காலத்தில் வணிகம் நோக்கில் தமிழகம் வந்த இசுலாமியர்கள் இங்கு தங்க ஆரம்பித்து நாளடைவில் தமிழக இசுலாமியராக தமிழ்ச் சமூகத்தில் முக்கியப் பங்காற்றினர். தமிழகத்தில் கிடைக்கக்கூடிய வரலாற்று ஆவணங்களைப் பொருத்தவரையில் பெரும்பாலானவை ஆட்சியாளர்கள், அதிகாரிகள், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோர் கோவில்கள், கோவிலோடு தொடர்புடைய மடங்கள், தர்ம சத்திரம் மற்றும் நீர்;நிலைகள் போன்ற அறம் சார்ந்த பொதுநலன்களுக்காக கொடை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கக்கூடியதாகவே இருக்கின்றன. இத்தகைய ஆவணங்களில் பிறருக்குக் கொடுத்து மகிழ்வதை ஈகைத்திருநாளாக கொண்டாடும் இசுலாமிய மார்க்கத்தைப் பின்பற்றும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரும்

சமயம் சார்ந்தும், பொதுநலன் கருதியும் பல்வேறு கொடைகள் வழங்கியுள்ள செய்தியும் காணப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்பட்ட கொடைகள் பற்றியும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

சமயம் சார்ந்த கொடைகள்

வழிபாட்டுத்தலங்களுக்கும் அதனோடு தொடர்புடைய மடங்களுக்கும் தேவைப்படும் வெவ்வேறு செலவினங்களுக்காக பல்வேறு தரப்பினரால் வழங்கப்பட்ட கொடைகளை சமயம் சார்ந்த கொடைகளாக வகைப்படுத்தலாம்.

ஆட்சியாளர்கள்

தற்போதைய இராணிப்பேட்டை மாவட்டத்திலுள்ள சோளிங்கர் என்னும் ஊரிலிருக்கும் பக்தவத்சல சுவாமி கோவில் முதல் பிரகாரம் வடக்குச் சுவரில் காணப்படும் பொ.ஆ.1716ஆம் ஆண்டினைச் சேர்ந்த முகலாய பேரரசர் பரூக்சியர் காலக் கல்வெட்டானது[1], கோவில் அலுவலர்களும் பிரமணர் குழு கோவில் பூசாரிகளும் இக்கோவிலில் சூடிக்கொடுத்த நாச்சியார் (ஆண்டாள்) படிமம் இல்லாதபடியினாலே அரசரிடம் முறையிட, அப்படிமத்தை கோயிலில் பிரதிஷ்டை செய்து சம்ரோக்ஷணை (பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்) செய்து கொடுப்பதாக பேரரசர் உருதிமொழி கொடுத்தபடியினால் இதற்கு பிராமணர் குழுவினர், கோவில் அலுவலர்கள் உள்ளிட்ட அணைவரும் சம்மதித்து சாசனம் எழுதிக் கொடுத்ததைப் பற்றித் தெரிவிக்கின்றது.

இராசிபுரம் வட்டம் மின்னக்கல் (இவ்வூரின் பழைய பெயர் உத்தண்ட மல்ல சமுத்திரம்) என்னும் ஊரிலுள்ள கோபாலகிருஷ்ணன் கோவிலில் 'திப்பு சுல்தான் பகதூர்' இவருடைய தந்தை காலத்திலேயே இங்கு வந்து இக்கோவிலுக்கு 575 ராஜகோபால வராகன் (அக்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு நாணயம்) கொடையளித்ததாக இக்கோவில் கல்வெட்டு[2] தெரிவிக்கின்றது. இதேபோன்று, இந்திய கல்வெட்டுத் துறையின் முன்னால் இயக்குனர் கே.வி.ரமேஷ் அவர்களிடம் இருக்கும் கறுப்பு கேன்வாஸ் துணியில் கன்னடத்தில் வெள்ளை எழுத்துக்களால் எழுதப்பட்ட ஆவணத்தில்[3] ஈரோடு, பெருந்துறை வட்டத்திலிருக்கும் குறிஞ்சி என்னும் ஊரிலுள்ள செல்லாண்டியம்மன் கோவில் வழிபாட்டுச் செலவினங்களுக்காகவும், பூசாரியின் நலனுக்காகவும் திப்பு சுல்தான் கொடை வழங்கிய செய்தி காணப்படுகின்றது.

தெலுங்கு பகுதி கோல்கொண்டாவை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சுல்தான்களில் அபுல் ஹசன் தனாஷா என்பவர் காஞ்சிபுரம் சங்கரமடத்திற்கு இரண்டு

முறை கொடைகள் வழங்கி செப்பேடுகள் வெளியிட்டுள்ளார். தெலுங்கு வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ள இச்செப்பேடுகளில் முதல் செப்பேடு பொ.ஆ1677ஆம் ஆண்டு காஞ்சிபுரம் காமக்கோடி பீடத்தின் பூஜை மற்றும் மடத்தின் இதர செலவினங்களுக்காக ஆண்டுதோறும் 115 வராகன் பொன் அளிக்க ஆணையிடப்பட்டதையும், இரண்டாம் செப்பேடு கோல்கொண்டா சுல்தான் அபுல்ஹசன் தனாஷா தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட மேல்பாக்கம் என்கிற கிராமத்தின் வருவாய் முழுவதையும் காஞ்சிபுரம் மடத்திலிருக்கக்கூடிய சந்திரமவுலீசுவர சுவாமியின் பூசைக்காக போகம் தவறாமல் (தொடர்ந்து) சந்திரனும் சூரியனும் உள்ளவரை கொடுக்க ஆணையிட்ட செய்தியும் காணப்படுகின்றது[4].

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரிலிருக்கும் பொன்வாசிநாதசுவாமி கோவில் இறைவன் சன்னதி மகாமண்டபம் வடக்குச் சுவரில் காணப்படும் கல்வெட்டு[5] ஹிஜ்ரா ஆண்டு 745 (பொ.ஆ.1376)இல் மதுரையை ஆட்சிசெய்த ஆதிசுல்தான் காலத்தில் இக்கோவிலுக்குச் சொந்தமான குடிநீங்கா தேவதான கிராமத்தை (குடிகள் நீக்காமல் கோவிலுக்கு தானமாக கொடுக்கப்பட்ட) கிராமத்தை அன்னவாசல் கூற்றத்தைச் சேர்ந்த இருக்குமணி உடையான் பெரியவன் வழுவாதரையர் என்பவர் மூலமாக ஏலத்துக்கு விட்டு அதன்மூலம் கிடைத்த 80 'வாளால் துறந்தான் பணத்தைப்' பயன்படுத்தி கோவில் பூசை செலவினங்களுக்கு பயன்படுத்த ஏற்பாடு செய்த செய்தி காணப்படுகின்றது.

திருவண்ணாமலை வாணியர் மடத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட 20 ஏடுகளைக் கொண்ட ஓலைப்பட்டயம்[6], திருவண்ணாமலையில் உள்ள அக்கினி தீர்த்தம் தர்மத்து வேலை தொடர்ந்து தடையின்றி நடைபெற வேண்டி ஆற்காடு ராஜா அசறகிருது கான் சாய்ப்பு மற்றும் காசம் சாய்ப்பு ஆகிய இருவரும் கொடை வழங்கி கையொப்பமிட்ட செய்தி காணப்படுகின்றது.

அலுவலர்கள்

இராமநாதபும் அருகிலுள்ள உத்தரக்கோசமங்கை மங்களநாதசுவாமி கோவில் மங்களேசுவரியம்மன் சன்னதியின் வாயிலிலுள்ள திருவாசியில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் 1924ஆம் ஆண்டு மதுரையில் மேலாளர் (மானேஜர்) பதவியிலிருந்த 'சையது இசுமாயில் சாயபு' என்பவர் திருஉத்தரகோசமங்கை ஸ்ரீமங்களேசுவரியம்மன் சன்னதிக்கு 230 விளக்குகள் உள்ள வெண்கலத்தாலான யாழிமுகத் திருவாச்சி ஒன்றை கொடை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது[7].

வணிகர்கள்

இராமநாதபுரம் மாவட்டம் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள தீர்த்தாண்டதானம் கோவிலில் காணப்படும் பாண்டிய மன்னன் சடையவர்மன் வீரபாண்டியன் காலத்து (கி.பி.1262) கல்வெட்டு[8], அத்திருக்கோவிலில் திருப்பணி செய்வதற்கு பல்வேறு தரப்பினரும் கூடி கலந்து பேசி முடிவு எடுத்தது பற்றிக் குறிப்பிடுகின்றது. இதில் அஞ்சு வண்ணத்தாரும் இடம்பெற்று அவர்களும் தங்களை இக்கோவில் திருப்பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டிருந்துள்ளமையை இக்கல்வெட்டுக் குறிப்பு தெரிவிக்கின்றது.

தென்காசி அருகிலிருக்கும் குற்றாலநாதசுவாமி கட்டளை பூசைக்காக தென்காசியிலுள்ள 'அசரது வாலா சாயபு அஹமது பேட்டை' என்னும் பகுதியின் மணியம் (ஊராட்சி செய்பவர் அல்லது ஊர்த்தலைவர்) 'இசுமாயில் ராவுத்தர்' உள்ளிட்ட பலரும் சேர்ந்து சம்மதித்து எழுதிக்கொடுத்த செப்புப் பட்டயத்தில்[9] குற்றாலநாதசுவாமிக்கு கட்டளை பூசை நடத்துவதற்கும் திருநெல்வேலி காந்திமதியம்மனுக்கு அதிகாலையில் நடைபெறும் பூசை வழிபாட்டுச் செலவினங்களுக்காகவும் தென்காசி அகமது பேட்டையில் இசுலாமியர் வணிகம் செய்யும் இடங்களான செங்கோட்டை, புளியரை, பண்புளி, கடையநல்லூர், சிவராமபேட்டை, சுரண்டை மற்றும் சந்தை முதலான இடங்களில் வணிகம் செய்யும் நாங்கள் ஏற்றுமதி இறக்குமதி உள்ளிட்டவற்றிற்கு வரி நிர்ணயம் செய்து கொடுத்தபடி மாசம் மாசம் கணக்குப் பார்த்து பணத்தைப் பெற்றுக்கொண்டு என்றென்றைக்கும் (தொடர்ந்து) நடைபெற வேண்டும் என்று கூறிய செய்தி காணப்படுகின்றது. மேலும் இந்த தர்மத்துக்கு இடையூறு செய்பவர்கள் பஞ்சாட்சரத்துக்கு உட்பட்டவனாக (இந்துவாக) இருந்தால் கங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலும், இசுலாமான முகமதிய மதத்தினராக இருந்தால் தாய்க்கு விக்கினம் (இடையூறு) செய்த தோஷத்திலும் போவார்கள் என்கிற செய்தியும், இச்செப்புப் பட்டயத்தை எழுதிய மாடன் செட்டியார் தானாதிபதி அம்மை நாதன் என்பவருடைய கையெழுத்தும் காணப்படுகின்றன.

பொதுமக்கள்

கி.பி.1645இல் விசய நகர மன்னர் மூன்றாம் சீரங்கராயர் தேவ மகாராயர் ஆட்சியின் போது வெங்கலப்ப நாயக்கர் என்பவர் நிர்வாகம் செய்த சீர்மையில் (காஞ்சிபுரம் பகுதியில்) இருந்த 'குரமு கொண்டா கற்தவாலத்து' என்னும் ஊரைச் சேர்ந்த 'குயீசன ராவுத்தர்' என்பவர் புண்ணியம் (நலம்) பெறுவதற்காக 'றெகனா

ராவுத்தர், நல்லன் ராவுத்தர், அல்லி ராவுத்தர் மற்றும் கான் ராவுத்தர்' ஆகிய நான்கு பேர் சேர்ந்து இவர்களுடைய அமரக் (உரிமைக்) கிராமமான நயினால் குப்பத்தில் இருக்கும் தோட்ட நிலத்தையும், நிலத்திலிருக்கும் குடிகளையும் செய்யூர் முருகனுக்கு சந்திரனும் சூரியனும் உள்ள வரை பயன்படுத்திக் கொள்ள தானமாக வழங்கி இதற்கு யாரேனும் இடையூறு செய்தால் அவர்கள் தாய், தகப்பன், குருவினை கொன்ற பாவத்தினையும், கங்கைக்கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்தினையும் பெறுவார்கள் என்கிற செய்தியைச் செய்யூர் வட்டம் இடைக்கழி என்னும் ஊரின் அருகிலுள்ள நயினார் குப்பத்திலிருக்கும் தூண் கல்வெட்டு[10] தெரிவிக்கின்றது.

திருக்கோவிலூர் வட்டத்திலுள்ள கூவனூர் என்னும் ஊரின் வயல் பகுதியில் உள்ள பாறையில் காணப்படும் கல்வெட்டு[11], பொ.ஆ.1728இல் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய கற்பூரவல்லி அம்பாலுக்கும், ஸ்ரீ அகஸ்தீஷ்வர சுவாமிக்கும் திருவிளக்கு எரிப்பதற்காக இலுப்பைத்தோப்பு என்னும் ஊரைச் சேர்ந்த 'அசரது சிபிலே கானுசாயபு' அவர்களும், ராசமானிய ராயஸ்ரீபண்டாரத்தார் அவர்களும், கிராமத்தார் வயித்தினாத பிள்ளை, மெச்சியாபிள்ளை மற்றும் இவ்வூர் குடிகளும் சேர்ந்து குறிப்பிட்ட மூலதனத்தைக் கொடுத்து அதன்மூலம் பெறப்படும் வட்டி வருவாயினைக் கொண்டு விளக்கு எரிக்க ஏற்பாடு செய்து அதனை தான பூர்வமாக சாசனம் எழுதிக்கொடுத்த செய்தியும், இதற்கு யாரேனும் இடையூறு செய்தால் அவர்கள் கங்கைக்கரையிலே காராம்பசுவைக் கொண்ற பாவத்தினைப் பெறுவார்கள் என்கிற செய்தியும் காணப்படுகின்றது.

பொதுநலன் சார்ந்த கொடைகள்

வழிபாட்டு தலங்களுக்கு கொடைகள் வழங்கியிருப்பது போலவே பொதுமக்களுடைய நலனுக்காகவும் பல்வேறு தரப்பினரால் கொடைகள் வழங்கப்பட்டுள்ளமையும் தமிழகத்தில் கிடைக்கப்பெறும் வரலாற்று ஆவணங்களில் காணப்படுகின்றன.

.ஆட்சியாளர்கள்

பொ.ஆ.1790களில் ஆர்க்காடு நவாப்பாக இருந்த வாலாஜா இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா பகுதியில் நீர்ப்பாசன வசதிக்காக கால்வாய் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்[12]. இக்கால்வாய் தற்போதும் அவரது பெயரால் வாலாஜா கால்வாய் என்றே அழைக்கப்படுகின்றது.

அலுவலர்கள்

பொ.ஆ.17ஆம் நூற்றாண்டில் நத்தம் பாளையக்காரர் லிங்கம நாயக்கருடைய காரிய கர்த்தாவாக இருந்த வத்தலை ராவுத்தர் என்பவர் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடியில் வயலிப்பறை என அழைக்கப்படும் பகுதியில் இருக்கும் வயலிக்குளம் கண்மாயில் நீர்ப்பாசன வசதிக்காக மடை ஒன்றினை ஏற்படுத்திக் கொடுத்துள்ள செய்தி அந்த மடைக்கல்லில் கல்வெட்டாகக் பொறிக்கப்பட்டுள்ளது[13].

வணிகர்கள்

கும்பகோணம் அருகிலுள்ள திருநாகேசுவரம் கோவில் கிரி குஜாம்பாள் சன்னதி முன்பாக நடப்பட்டுள்ள கல்லில் காணப்படும் பொ.ஆ.1783ஆம் ஆண்டுக் கல்வெட்டு[14], நாகலிங்கசுவாமி கோவிலிலுள்ள அம்மனுக்கு திருவிளக்கு எரிப்பதற்காக உப்பிலியப்பன் கோவில் கடை முதல் வடக்கில் ராவுத்தர் கடை வரை ஒரு கடைக்கு நாள் ஒன்றுக்கு அரைக்காசு வீதம் கடைத்தெருவில் கடைக்காரர்களில் மாதம் ஒருவர் வரி வசூல் செய்து சன்னதியில் திருவிளக்கு எரிவது குறைந்து விடாமல் சன்னதிக்கு சென்று வருபவர்களிடம் விசாரித்து பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், வருகிற வருவாயில் இரண்டு கடை மாணியத்தை பள்ளிவாசலுக்கு கொடுக்க வேண்டும் என்றும் இவ்வூர் கடைக்காரர் அணைவரும் சம்மதித்து மகமை பட்டயம் செய்து கொடுத்ததைப் பற்றித் தெரிவிக்கின்றது. மேலும் இதனை எதிர்க்க நினைத்தால் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்தையும், ராவுத்தர்மாராக இருந்தால் மக்காவிலே செய்யக்கூடாததைச் செய்த பாவத்தைப் பெறுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் ஏகோசி காலத்தில் பொ.ஆ.1735இல் தஞ்சாவூர் கொங்கணேசுவரர் கோவிலில் சோமவார கட்டளை பூசை நடத்துவதற்கு கொடை வழங்கியவர்களுள் 'பாசிக்கடை மீரா சாயபு' என்பவரும் ஒருவர் என்கிற செய்தியும், அதேபோல மற்றொரு மராட்டிய மன்னர் பிரதாபசிங் காலத்தில் 1758இல் பலபட்டடைச் செட்டியார்கள், வர்த்தகர்கள், பதினெட்டு பட்டடை ஆகிய வணிகர்களோடு 'துலுக்கர் லெப்பை' வியாபாரிகளும் சேர்ந்து தஞ்சாவூர் கொங்கணேசுவரர் கோவிலுக்கு மகமைக் (வரிக்) கொடை கொடுக்க ஒப்புக்கொண்ட செய்தியும் இந்த மராட்டிய மன்னர்களுடைய செப்பேடுகளில் காணப்படுகின்றன[15].

பொதுமக்கள்

சென்னை அருகிலுள்ள பல்லாவரம் அக்ரகாரத்தில் உள்ள கிணற்றின் அருகில் காணப்படும் பொ.ஆ.1733ஆம் ஆண்டு பலகைக்கல் கல்வெட்டில்[16] "அவுளம்மா சமுத்திரம்" என்று அழைக்கப்பட்ட பல்லாவரம் அக்ரகாரத்தில் 'சேகு அலாவுதீன்'

என்பவரது மகன் 'சேகு முசாமியர்' என்பவர் அய்யங்கார்களிடம் தனது சொந்த செலவில் நிலம் விலைக்கு வாங்கி அந்த இடத்தில் அய்யங்கார்களுடைய நீர்த் தேவைக்காக தர்மக் கிணறு வெட்டிக் கொடுத்ததைப் பற்றித் தெரிவிக்கின்றது. இதேபோன்று, சென்னை மயிலாப்பூரில் பாட்ஷா பாக் என்கிற இடத்திலிருக்கும் பள்ளிவாசல் உபதேச மேடை அருகில் உள்ள கல் ஒன்றில் காணப்படும் பொ.ஆ.1722-23ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு[17] 'அசன்கான்' என்பவர் அந்த ஆண்டில் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்காக கிணரும் குளமும் ஏற்படுத்திய செய்தியைக் கூறுகின்றது.

சிதம்பரத்தை அடுத்துள்ள கிள்ளை என்ற கிராமத்திலுள்ள பக்கிரிவாய்க்கால் மதகில் காணப்படும் பொ.ஆ.1875ஆம் ஆண்டுக் கல்வெட்டு[18] 'சையது ஷா மொயினுதீன் பார்ஸா சாயா' என்பவர் இங்கிருந்த மதகு சிதைவடைந்திருந்தமையால் அதனை தன்னுடைய சொந்த பணத்தை செலவு செய்து அடித்தளத்திலிருந்து புதிதாக கட்டிக்கொடுத்ததைத் தெரிவிக்கின்றது. இதில் குறிப்பிடத்தக்க செய்தி, இந்த கால்வாய் மற்றும் மடகினை பொதுமக்களுடைய பயன்பாட்டிற்காக சொந்த பணத்தைச் செலவு செய்து உருவாக்கிக் கொடுத்தவர் இவருடைய பூட்டன் 'ஹஜரத் சையத் ஷா ரகமத்துல்லா' என்பவராவார். தன்னுடைய முன்னோரால் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாசனம் தொடர்பான அறச்செயல் தொடர்ந்து செயல்பட அவருடைய வாரிசும் முனைப்போடு பங்கெடுத்துக்கொண்டமை நோக்கத்தக்கதாகும். வேலூர் நகருக்கு குடிநீர் வழங்கக்கூடிய முக்கிய ஏரியான ஒட்டேரியின் மேற்குக் கலிங்கில் காணப்படும் பொ.ஆ.1772ஆம் ஆண்டினைச் சேர்ந்த கல்வெட்டு[19] 'அசரது மம்மது பாகூர் சாயபு' என்பவர் இந்த கலிங்கினை கட்டி வைத்துள்ளார் என்கிற செய்தி காணப்படுகின்றது.

நாகூரில் பேருந்து வழி நெடுஞ்சாலையின் மேல்புறம் உள்ள பழைய வீட்டுத் திண்ணைச் சுவரில் காணப்படும் கல்வெட்டு[20], பொ.ஆ.1812இல் நாகூரிலிருந்த 'நூரு முகம்மது மரைக்காயர்' என்பவருடைய மகன் 'முகம்மது அலி மரைக்காயர்' என்பவர் அல்லாவை நினைத்து பொதுமக்கள் உபயோகத்திற்காக குளம், திருவாசல், தோட்டம், வீடு மற்றும் கடை ஆகியவற்றை கொடையாக வழங்கி தர்மத்துக்கு விட்ட செய்தியும், இவற்றின் நான்கு திசை எல்லைகளும், இந்த தர்மத்திற்கு உதவியாக இருப்பவர்கள் அல்லாவுடைய 'றெகுமத்' பெறுவார்கள், அதே வெளையில் இந்த தர்மத்துக்கு எதிராகச் செயல்படுபவர்கள் அல்லாவுடைய 'முனிவில்' அகப்படுவார்கள் என்கிற செய்தியும் காணப்படுகின்றது.

முடிவுரை

இவ்வாறாக இசுலாமியர்களால் வழங்கப்பட்ட கொடைகளைப் பற்றிய செய்திகள் தமிழகத்தில் கிடைக்கப்பெறும் வரலாற்று ஆவணங்களில் காணப்படுகின்றன. இந்தக் குறிப்புகள் இடைக்காலத் தமிழகச் சமூக வரலாற்றில் இசுலாமியர்களுடைய இன்றியமையாத பங்களிப்பினையும், சமூகத்தின் மீதான அவர்களுடைய அக்கறையையும், அவர்கள் குடியிருந்த பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலோடு தங்களையும் இணைத்துக் கொண்டிருந்ததையும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. இராசு செ., (தொகுப்பாசிரியர்), தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்கள், நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை, 2007, பக்.33-34.
2. மேலது, ப.21
3. மேலது, ப.21
4. மேலது, ப.30
5. *Annual Reports on South Indian Epigraphy*, No.297 of 1943-44, Department of Archaeology, Delhi, 1955.
6. பாபு கு., அக்கினி தீர்த்த ஓலைப்பட்டையம், ஆவணம் இதழ்-29, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2018, பக்.190-200.
7. முத்துராணி, உத்தரகோசமங்கை திருவாச்சி கல்வெட்டு, ஆவணம் இதழ்-7, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1996, ப.122.
8. *Annual Report on Indian Epigraphy*, No.598 of 1926, ASI, Delhi.
9. இராசு செ., (தொகுப்பாசிரியர்), தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்கள், நேஷனல் ப்பளிஷர்ஸ், சென்னை, 2007, பக்.19-20.
10. இராசகோபால் சு., முருகன் கோவிலுக்கு இஸ்லாமியர் கொடை, கல்வெட்டு இதழ்-64, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2004, பக்.5-7.
11. விசயவேணுகோபால் கோ., (ம) சுப்பராயலு எ., கூவனூர் காணுசாயிபு கல்வெட்டு, ஆவணம் இதழ்-14, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2003, பக்.91-92.
12. இராசு செ., (தொகுப்பாசிரியர்), தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்கள், நேஷனல் ப்பளிஷர்ஸ், சென்னை, 2007, ப.46.
13. மேலது, ப48.
14. மேலது, ப.42.

15. மேலது, ப.22.

16. *South Indian Inscriptions*, Vol-26, No.58 & *ARE*. No: 56 of 1909.

17. இராசு செ., (**தொகுப்பாசிரியர்**), தமிழக இஸ்லாமிய வரலாற்று **ஆவணங்கள்**, நேஷனல் ப்பளிஷர்ஸ், **சென்னை**, 2007, ப.46.

18. சந்திரமூர்த்தி மா., **கிள்ளை** பக்கிரி வாய்க்கால் மதகுக் கல்வெட்டு, **ஆவணம்** இதழ்-10, தமிழகத் **தொல்லியல்** கழகம், தஞ்சாவூர், 1999, ப.91.

19. காந்தி ம., வேலூர் **கல்வெட்டுகள்**, ஆவணம் இதழ்-15, தமிழகத் **தொல்லியல்** கழகம், தஞ்சாவூர், 2004, ப.68.

20. ஜெயராமன் இரா., நாகூர் திருவாசல் கல்வெட்டு, கல்வெட்டு இதழ்-68, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2005, பக்.12-13.